குற்ற வழக்குத் தொடர்வுத் துறை

## சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை திருமதி.கோ.சித்ராதேவி, எம்.ஏ.,பி.எல்.,

ந.க.எண். 1631/குவதொஇ/அ2/2020-3 நாள். 23/11/2020.

(இயக்கக ஆணை எண் . 84/2020)

| | |
|---|---|
| சிறு தலைப்பு : | பொதுப்பணிகள் -- குற்ற வழக்குத் தொடர்வுத் துறை – திருமதி. இரா. திவ்யா, இளநிலை உதவியாளர், தஞ்சாவூர் குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர் அலுவலகம் -- பணிவரன்முறை செய்து (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) ஆணை வழங்குதல் தொடர்பாக. |
| படிக்கவும் : | 1) சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதங்கள் எண் 2455/பிஎஸ்டி-1/2020 நாள் 30-05-2020 .<br>2) இவ்வியக்கக செயல்முறை ஆணை ந.க.எண், 1631/குவதொஇ/அ2/2020 -3, இயக்கக ஆணை எண் 51/2020 நாள் 23-07-2020.<br>3) தஞ்சாவூர் குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர் அலுவலகக் கடிதம் ந.க.எண். 197/அ1/2020 நாள் 31/07/2020. |

ஆணை:

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் மற்றும் இயக்கக பணி நியமன ஆணையின் படி திருமதி. இரா. திவ்யா, அவர்கள் இளநிலை உதவியாளராக தஞ்சாவூர் குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்டார். மேற்படி ஆணையின்படி தனியர் 31/07/2020 அன்று முற்பகல் முதல் தஞ்சாவூர் குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்

தொடர்கிறது------

2) எனவே, திருமதி. இரா. திவ்யா, இளநிலை உதவியாளர், குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் அவர்களது இளநிலை உதவியாளர் பணிநியமனத்தை தனியர் பணிக்கு அறிக்கை செய்த நாள் முதல் பின்வருமாறு வரன்முறை செய்து (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) ஆணையிடப்படுகிறது.

| வரிசை எண் | பெயர்/பதவி/பணிபுரியும் அலுவலகம் | பணிக்கு அறிக்கை செய்த நாள் | பணிவரன்முறை செய்த நாள் (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) |
|---|---|---|---|
| 1. | திருமதி. இரா. திவ்யா, இளநிலை உதவியாளர், தஞ்சாவூர் கு.வ.தொ. துணை இயக்குநர் அலுவலகம் | 31/07/2020 முற்பகல் | 31/07/2020 முற்பகல் |

3) மேற்படி பணிவரன்முறையானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்/மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் தொகுதி 4–ல் அடங்கிய ஒருங்கிணைந்த குடிமையியல் பணிகளுக்கான தேர்வு 2018–19 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான ஆள் தேர்ந்தெடுப்பு தொடர்பாக தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள நீதிப் பேராணை மனுக்கள் மீதான தீர்ப்புரைக்கு உட்பட்டதாக அமையும்.

4) மேற்படி தனியரது பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டு, (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) மூன்றாண்டுகள் தொடர்ந்த பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவரது இரண்டாண்டு கால தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினை எழுதி தேர்ச்சி பெறுதல் வேண்டும். மேலும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு அப்பயிற்சியில் தேர்ச்சி அடைதல் வேண்டும்.

உதவி இயக்குநர்,
குற்றவழக்கு தொடர்வு துறை,
விழுப்புரம்

தொடர்கிறது----

5) மேலும் மேற்படி தனியர் இளநிலை உதவியாளர் நிலையிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு பெறுவதற்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1–ல் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

6) எனவே திருமதி. இரா. திவ்யா, இளநிலை உதவியாளர், குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் பணி நியமனத்தை, பணிவரன்முறை செய்யப்பட்ட (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள் முதல்) விவரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தினை இயக்ககத்திற்கு தெரியப்படுத்தும்படி தஞ்சாவூர் குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) இந்தச் செயல்முறை ஆணையினை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை மறுதபாலில் இயக்ககத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

24-11-2020

இயக்குநர்(பொ),

கு.வ.தொ.துறை, சென்னை–5.

24/11/2020

பெறுநர்

திருமதி. இரா. திவ்யா,
இளநிலை உதவியாளர்,
கு.வ.தொ. துணை இயக்குநர் அலுவலகம்,
தஞ்சாவூர் – உரிய வழி முறையாக.

1) துணை இயக்குநர்,
குற்ற வழக்குத் தொடர்வுத் துறை,
தஞ்சாவூர்

நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.

நகல் : இயக்கக ஆணைப் பத்தகம்/கோப்புக்கு/இருப்புக் கோப்புக்கு/உபரி.